# மார்ச் - 10 - வெள்ளி

நாற்பது வேத சாட்சிகள்

"அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள்" (மத் 5:24)

---

## முதல் வாசகம்: ஏசேக்கியல் 18 : 21 – 28

தீயவரோ தாம் செய்த பாவங்கள் அனைத்தையும் விட்டு மனம்மாறி, என் நியமங்கள் அனைத்தையும் கைக்கொண்டு, நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்தால் அவர்கள் வாழ்வது உறுதி, அவர்கள் சாகார். அவர்கள் இழைத்த தவறுகள் அனைத்தும் அவர்களுக்கெதிராக நினைக்கப்படமாட்டா. அவர்கள் கடைப்பிடித்த நேர்மையின் பொருட்டு அவர்கள் வாழ்வர். உண்மையில், பொல்லாரின் சாவையா நான் விரும்புகிறேன்? அவர்கள் தம் வழிகளினின்று திரும்பி வாழவேண்டும் என்பதன்றோ என் விருப்பம்? என்கிறார் தலைவராகிய ஆண்டவர். நேரியவர் தம் நேரிய நடத்தையினின்று விலகி, தவறிழைத்து, பொல்லாரைப் போல் வெறுக்கத் தக்கவற்றை எல்லாம் செய்தால், அவர்கள் வாழ்வரோ? அவர்கள் கடைப்பிடித்த நேர்மையான தெதுவும் நினைக்கப்படமாட்டாது. அவர்கள் இழைத்த துரோகத்தின் பொருட்டும், செய்த பாவத்தின் பொருட்டும் அவர்கள் சாவர். ஆயினும், "தலைவரின் வழி செம்மையானதாக இல்லை" என்று நீங்கள் சொல்கிறீர்கள். இஸ்ரயேல் வீட்டாரே! கேளுங்கள். என் வழியா நேர்மையற்றது? உங்கள் வழிகளன்றோ நேர்மையற்றவை! நேரியவர் தம் நேரிய நடத்தையினின்று விலகி, தவறிழைத்தால், அவர்கள் தாம் இழைத்த தவற்றின் பொருட்டுச் சாவர். பொல்லார் தாம்செய்த பொல்லாப்பினின்று விலகி, நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்தால், தம் உயிரை அவர்கள் காத்துக்கொள்வர். அவர்கள் உண்மையைக் கண்டுணர்ந்து, தாம் செய்த குற்றங்கள் அனைத்தினின்றும் விலகிவிட்டால், அவர்கள் வாழ்வது உறுதி அவர்கள் சாகமாட்டார்.

**பதில்பாடல் :** நீர் எம் குற்றங்களை மனதில் கொண்டிருந்தால் யார்தான் நிலைத்து நிற்க முடியும்

## நற்செய்தி : மத்தேயு 5: 20 - 26

அந்நாட்களில் இயேசு கூறியதாவது: மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும். இல்லையெனில், நீங்கள் விண்ணரசுக்குள் புக முடியாது என உங்களுக்குச் சொல்கிறேன். "கொலை செய்யாதே் கொலை செய்கிறவர் எவரும் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர்" என்று முற்காலத்தவர்க்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் "தம் சகோதரர் சகோதரிகளிடம் சினங்கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார் தம் சகோதரரையோ சகோதரியையோ "முட்டாளே" என்பவர் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவார் "அறிவிலியே" என்பவர் எரிநரகத்துக்கு ஆளாவார். ஆகையால் நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலிபீடத்தின்முன் உங்கள் காணிக்கையை வைத்து விட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள். உங்கள் எதிரி உங்களை நீதிமன்றத்துக்குக் கூட்டிச் செல்லும் போது வழியிலேயே அவருடன் விரைவாக உடன்பாடு செய்துகொள்ளுங்கள். இல்லையேல் உங்கள் எதிரி நடுவரிடம் உங்களை ஒப்படைப்பார். நடுவர் காவலரிடம் ஒப்படைக்க, நீங்கள் சிறையில் அடைக்கப்படுவீர்கள். கடைசிக் காசு வரை திருப்பிச் செலுத்தாமல் அங்கிருந்து வெளியேற மாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன" என்றார்.

**தியானம்:** தவக்காலத்தில் வாசிக்கப்படும் எல்லா வாசகங்களுமே மனமாற்றத்தைத்தான் வலியுறுத்துகின்றன. மனமாற்றம் என்பது எமக்கு மிக மிக அவசியமானது. ஒரு பொருளோ, இடமோ, ஆடையோ, நாம் வாழும் வீடோ அழுக்காக இருந்தால் அவற்றை நாம் சுத்தமாக்க விரும்புகின்றோம், அவ்வாறுதான் எமது மனமும், வாழ்வும் அழுக்காக இருக்குமானால் அதனை கழுவி சுத்தமாக்க திருச்சபை நமக்கு தவக்காலத்தை தந்துள்ளது. அதனைப் பயனுள்ள விதத்தில் செலவிடுவது எமது கையில் உள்ளது. மரக்கறி வகை சாப்பிடுவதும், மதுபானங்களை அருந்தாமல் விடுவதும், புகை பிடிப்பதை தவிர்ப்பதும், திரைப்படங்கள் பார்க்காமல் விடுவதும் மட்டும் நமது வாழ்வின் கறைகளை போக்கிவிடுமா? மனமாற்றம் இல்லை என்றால், அன்பு இல்லை என்றால், மன்னிப்பு இல்லை என்றால், தாழ்ச்சி இல்லை என்றால், விட்டுக்கொடுக்கும் மனம் இல்லை என்றால், பொறுமை இல்லை என்றால், சமாதானம் இல்லை என்றால் நாம் இவ்வாறான காரியங்களை கடைப்பிடிப்பதில் எவ்வித பலனும் இல்லையே! எனவே தவக்காலத்தின் அர்த்தத்தை புரிந்து அதன்படி வாழ்வோமாக!